பொருளியல்

சந்தை அமைப்புகளின் அடிப்படைப் பண்புகள்



e தக்சலாவ கல்விக்கூடம் ™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி 4.4

சந்தை (MARKET)

ஏதாவது பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்கின்ற அனைத்து நிறுவனங்களினதும் கூட்டுத்தொகை சந்தை ஆகும்.நடைமுறை உலகில் வேறுபட்ட சந்தை அமைப்புகள் காணப்படுகின்றன சந்தை அமைப்புகள் பின்வரும் காரணிகள் அடிப்படையில் வேறு படுத்தப் படுகின்றன.

1. சந்தையில் காணப்படும் நிறுவனங்களின் எண்ணிக்கை
2. பண்டத்தின் தன்மை
3. பிரவேச சுதந்திரம்
4. சந்தையில் உள்ள உற்பத்தி நிறுவனங்களிடையே காணப்படும் போட்டி நிலைமை

சந்தை அமைப்புகளின் வகைகள்

- நிறைபோட்டி
- தனியுரிமை போட்டி
- தனியுரிமை
- சிலருரிமை

நிறைபோட்டிச் சந்தை

ஓரினத் தன்மை கொண்ட பொருளை உற்பத்தி செய்கின்ற பிரவேச தடையற்ற அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்கள் காணப்படும் சந்தை நிறைபோட்டிச் சந்தையாகும்

நிறைபோட்டிச் சந்தையின் பண்புகளாவன:-

- உற்பத்திகள் ஓரினத் தன்மை கொண்டவை
- அதிக எண்ணிக்கையுடைய விற்பனையாளரும் கொள்வனவாளரும் காணப்படுதல்
- நிறுவனம் விலையை ஏற்போனாகக் காணப்படுதல்.
- பிரவேச சுதந்திரம் காணப்படுதல்
- கொள்வனவாளர்களும் விற்பனையாளர்களும் சந்தை தொடர்பான தகவல்களை பூரணமாகவும் செலவுகளின்றியும் பெற்றுக்கொள்ளலாம்
- வளங்களின் அசைவிற்குத் தடையில்லை
- நீண்ட காலத்தில் சந்தையில் உள்ள அனைத்து நிறுவனங்களும் சாதாரண இலாபத்தை உழைக்க குறுங்காலத்தில் சாதாரண இலாபம், அசாதாரண இலாபம்,நட்டம் என்பவற்றை உழைக்க முடியும்.

தொகுப்பு - எஸ்.ஜெயக்குமார் ஆசிரியர் (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்)

கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

விலையை ஏற்போன்

- நிறைபோட்டி நிறுவனம் ஒன்றிற்கு சந்தையின் விலையை தீர்மானிக்கும் ஆற்றல் காணப்படாததுடன் சந்தையினால் தீர்மானிக்கப்பட்ட விலையின் தேவையான அளவை நிறுவனம் நிரம்பல் செய்யலாம். சந்தையில் நிலவும் விலையின் மீது நிறுவனத்தினால் எதுவித தாக்கமும் செய்ய முடியாது என்பதனால் சந்தை நிர்ணயித்த விலையை ஏற்று அந்த விலையில் மொத்த நிரம்பலை விற்பனை செய்ய முடியுமாக இருப்பதனால் நிறைபோட்டி நிறுவனம் விலையினை ஏற்போனாகக் காணப்படுகின்றது.
- இதற்குக் காரணம் சந்தையில் உள்ள எல்லா நிறுவனங்களும் ஓரினத் தன்மை வாய்ந்த பண்டங்களை உற்பத்தி செய்வதும் சந்தையின் மொத்த நிரம்பலில் மிகக் குறுகிய அளவினை மட்டும் நிறுவனம் உற்பத்தி செய்வதனால் ஆகும். இதன் காரணமாக நிறைபோட்டி நிறுவனத்தின் கேள்வி வளையி கிடையச்சிற்குச் சமாந்தரமாக காணப்படுகின்றது.



தனியுரிமை

தொழிலும் நிறுவனமும் ஒன்றாக காணப்படுவதும் விசேட தன்மையைக் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்யும் சந்தை அமைப்பு தனியுரிமைச் சந்தை ஆகும்.

தனியுரிமைச் சந்தையின் பண்புகளாவன:-

- விசேட தன்மை வாய்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யப்படுதல்
- ஒரு நிறுவனம் மட்டும் உற்பத்தியில் ஈடுபடுதல்
- பிரவேசத் தடைகள் காணப்படுதல்
- சந்தைத் தகவல்கள் நிறைவற்றதும் செலவின்றிப் பெற்றுகொள்ள முடியாததும் ஆகும்
- சாதாரண கேள்விக் கோடு காணப்படும் (விலையில் அல்லது தொகையில் நிறுவனம் செல்வாக்குச் செலுத்த முடியும்)



தொகுப்பு - எஸ்.ஜெயக்குமார் ஆசிரியர் (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்)
கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



உதாரணம்:-

மின்சார சபை புகையிரத திணைக்களம் இலங்கை துறைமுக அதிகார சபை

தனியுரிமைச் சந்தையில் நிறுவனம் ஒன்று புதிதாகப் பிரவேசிப்பதைத் தடைசெய்யும் இயற்கை மற்றும் செயற்கை காரணிகளாவன

- மூலப்பொருள் தொடர்பான உடமை

  பண்டம் ஒன்றை உற்பத்தி செய்யும் மூலப் பொருட்களின் உரிமை தனி ஒரு நிறுவனத்திடம் காணப்படுமாயின் வேறு நிறுவனங்கள் அத்தொழிலில் ஈடுபட முடியாது

- அரசின் சட்ட ரீதியான தடைகள்

  அரசு மேற்கொள்ளும் செயற்பாட்டின் காரணமாகவும் புதிய நிறுவனங்களின் நுழைவு தடைப்பட்டு தனியுரிமை நிலை தோன்றும்

- அளவுத்திட்டச் சிக்கனங்கள் தோன்றுதல்

  இவ்வாறு அளவுத் திட்டச் சிக்கனங்கள் தோன்றும் போதும் புதிய நிறுவனங்களின் உட்பிரவேசம் தடைபடுகின்றது நீண்ட காலத்தில் சகல உள்ளீடுகளையும் மாற்றி உற்பத்தி செய்யும்போது அளவுத் திட்ட சிக்கனங்கள் தோன்றும் இவ் அளவுத்திட்ட சிக்கனங்கள் காரணமாக புதிய நிறுவனங்கள் உட்பிரவேசிக்க முடியாது போகலாம்.

தனியுரிமைப் போட்டி

தொழிலுக்குள் நுழைய தடையற்றதும் அதிகளவு நிறுவனங்களைக்கொண்ட சந்தை அமைப்பு தனியுரிமைப் போட்டி சந்தையாகும். இச்சந்தையில் தனியுரிமையினதும் நிறைபோட்டியினதும் பண்புகள் காணப்படும் இச்சந்தை பற்றிய எண்ணக்கருவானது 1930ஆம் ஆண்டில் K. எட்வேட் சேம்பிரலிங் எனும் பொருளியல் அறிஞரால் முன்வைக்கப்பட்டது

இச்சந்தை அமைப்பினை நடைமுறையுலகில் அதிகளவு காணக்கூடியதாகவிருக்கின்றது.



தொகுப்பு - எஸ்.ஜெயக்குமார் ஆசிரியர் (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்)

கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தனியுரிமைப் போட்டிச் சந்தையின் பண்புகளாவன:-

- தொழிலில் அதிகளவு நிறுவனங்கள் காணப்படும்
- ஒவ்வொரு நிறுவனங்களும் வேறுபடுத்தப்பட்ட பண்டங்களை உற்பத்தி செய்யும்
- பிரவேச சுதந்திரம் காணப்படுகின்றது
- நிறுவனத்தின் கேள்விக் கோடு கீழ் நோக்கிச் சரிந்து செல்கின்றது
- வளங்களின் அசைவிற்குத் தடை இல்லை
- நீண்ட காலத்தில் நிறுவனம் சாதாரண இலாபத்தினையும் குறுங்காலத்தில் சாதாரண இலாபம், அசாதாரண இலாபம், நட்டம் ஆகியவற்றை உழைக்கின்றது
- நிறுவனம் விலையை அமைப்போனாகக் காணப்படும்
- பண்டங்கள் பூரண பதிலீடுகளல்லாமல் நெருங்கிய பதிலீட்டுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் காணப்படும்

பொருள் வேறுபாட்டின் காரணமாக உற்பத்தி நிறுவனங்களுக்கு இடையே போட்டித் தன்மை காணப்படும் நிறுவனங்களில் போட்டித் தன்மையை ஏற்படுத்த பின்வரும் முறைகள் பயன்படுத்தப்படும்

- சந்தையின் பண்புகள்
- பொருளின் தரம்
- பொருளின் விலை
- விநியோகம்

.

உதாரணம் :- சிகை அலங்கரிப்பு நிலையம் , உணவகம் , மொத்த சில்லறை வியாபாரம்





தொகுப்பு - எஸ்.ஜெயக்குமார் ஆசிரியர் (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்)

கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

சிலருரிமைச் சந்தை

மொத்தச் சந்தையில் ஒரு சில நிறுவனங்களின் ஆதிக்கத்தின் கீழ் காணப்படும் சந்தை சிலருரிமைச் சந்தை எனப்படும்.

சிலருரிமைச் சந்தையின் பண்புகளாவன:-

- ஒரு சில நிறுவனங்கள் காணப்படுதல்
- பிரவேசத் தடை கடுமையாக இருத்தல்
- நிறுவனங்கள் ஒன்றில் ஒன்று தங்கி இருக்கும்
- வேறுபடுத்தப்பட்ட பொருட்களோ அல்லது வேறு படுத்தப்படாத பொருட்களோ உற்பத்திச் செய்யப்படும்
- நிறுவனங்கள் எதிர்நோக்கும் கேள்வி வளையி ஒப்பீட்டு ரீதியில் நெகிழ்ச்சியற்றதாகவும் கீழ் நோக்கிச் சரிந்தும் காணப்படும்
- நீண்ட காலத்திலும் குறுங்காலத்திலும் அசாதாரண இலாபத்தினை உழைக்கும்
- விலையினை நிர்ணயிப்போன்/ அமைப்போனாகக் காணப்படும்

சிலருரிமைச் சந்தையின் பிரவேசத் தடை

சிலருரிமைச் சந்தையானது இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ தடை விதிப்பதன் மூலம் பிரவேசத் தடையை மேற்கொள்கின்ற

- நிறுவனத்திற்குள்ளே அளவுத் திட்ட சிக்கனங்கள் இடம் பெறுதல்
- தந்திரோபாயங்களைப் பின்பற்றுதல்
- ஆரம்ப மூலதனம் அதிகமாயிருத்தல்
- மூலப்பொருள் கட்டுப்பாடானது சில நிறுவனங்களுக்கு மட்டும் காணப்படுதல்
- சட்டக் காரணிகள்

சந்தையில் ஒரு நிறுவனம் விலையில் ஒரு வேறுபாட்டினை மேற்கொள்ளுமாயின் ஏனைய நிறுவனங்கள் அதற்கு எதிர் நடவடிக்கையினை மேற்கொள்வதனால் நிறுவனத்தின் கேள்வித் தொகை நிச்சயமற்றதாகும் இதனால் விலை மீது காட்டப்படும் துலங்கல்களின் அடிப்படையில் கேள்வித் தொகை மாற்றமடைய முடிவதனால் கேள்விக் கோட்டில் முறிவு பட்டத் தன்மை தோன்ற வாய்ப்புள்ளது.

தொகுப்பு - எஸ்.ஜெயக்குமார் ஆசிரியர் (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்)

கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

4 சந்தைகளும் ஒரே பார்வையில்

விடயங்கள்	நிறைபோட்டி	தனியுரிமை	தனியுரிமைப் போட்டி	சிலருரிமை
தொழிலிலுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை	ஏராளம்	ஒன்று மட்டும்	அதிகம்	சில
உற்பத்திப் பொருளின் தன்மை	ஒரினத் தன்மை	தனித்தன்மை	பொருள் வேறாக்கம்	வேறுபட்டவை /ஒத்த தன்மை
நிறுவனம் விலையில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய தன்மை	விலை ஏற்போன்	உருவாக்குவோன்	உருவாக்குவோன்	கூட்டாக நிர்ணயித்தல் (உருவாக்கவும் முடியும்)
நிறுவனம் எதிர்நோக்கும் கேள்விக் கோடு				
விளம்பரம்	தேவையற்றது	தேவையற்றது (அறிமுக விளம்பரம்)	அவசியம்	அவசியம்
பிரவேசத் தடை	இல்லை	உண்டு	இல்லை	உண்டு
நீண்ட காலத்தில் நிறுவனத்தின் இலாபம்	சாதாரண இலாபம்	அசாதாரண இலாபம்	சாதாரண இலாபம்	அசாதாரண இலாபம்
உதாரணம்	நெட் சந்தை மரக்கறி சந்தை மீன் சந்தை	இலங்கையின் மின் விநியோகம் நீர் விநி-யோகம் புகையிரதச் சேவை	சிகை அலங்காரம் சாப்பாட்டுக்கடை மொத்த சில்லறை வர்த்தகம்	தொலைத்தொடர்புச் சேவை வானொலி சேவை தொலைக்காட்சி சேவை





தொகுப்பு - எஸ்.ஜெயக்குமார் ஆசிரியர் (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்)

கணனி வடிவமைப்பு - திரு.ச.ராதாரவி ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா, தலைமன்னார்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk